அரசாங்க அச்சுத் திணைக்களம்



இலங்கைப் பாராளுமன்றம்

இலங்கையில் படைக்கலச் சேவிதர் அலுவலகம், அதன் வரலாறு மற்றும் பணி, குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள்

தயாரிப்பு

நரேந்திர பெர்னாந்து
படைக்கலச் சேவிதர்

இலங்கையில் படைக்கலச் சேவிதர் அலுவலகம்

அதன் வரலாறு மற்றும் பணி,

குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள்

PL 11706 - 250 (11/2019) *அரசாங்க அச்சுத் திணைக்களம்*, இலங்கை.

பொருளடக்கம்

	பக்கம்
1. பின்னணி	1
2. இலங்கையில் படைக்கலச் சேவிதர் அலுவலகம் மற்றும் அதன் வரலாறு	2 - 4
3. பணி	5
4. குறிக்கோள்கள்	6 - 7
5. தொழிற்பாடுகள்	8 - 14
6. திணைக்களத்தின் அமைப்பு	14
7. திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு (விளக்கப்படம்)	15
8. பின்னிணைப்பு - அ	16
9. பின்னிணைப்பு - ஆ	17
10. பின்னிணைப்பு - இ	18 - 19
11. செங்கோலின் வடிவமைப்பு	20
12. பின்னிணைப்பு - ஈ	21 - 22
13. பின்னிணைப்பு - உ	23 - 24
14. பின்னிணைப்பு - ஊ	25
15. பின்னிணைப்பு - எ	26
16. பின்னிணைப்பு - ஏ	27
17. பின்னிணைப்பு - ஐ	28

நரேந்திர பர்னாந்து
படைக்கலச் சேவிதர்
(2018 ஆகஸ்ட் - இன்றுவரை)

குஷான் சம்பத் ஜயரத்ன
பிரதிப் படைக்கலச் சேவிதர்

அசிந்த சிறிமல் கூரே
உதவிப் படைக்கலச் சேவிதர்

முன்னாள் படைக்கலச் சேவிதர்கள்

எம். இஸ்மாயில் MBE
முதலாவதுபடைக்கலச் சேவிதர்
(1947 - 1961)

ஜே. ஆர். த சில்வா
(1961 - 1970)

ரொனீ அபேசிங்க
(1970 - 1996)

விஜய பள்ளியகுருகே
(1996 - 2006)

அனில் பராக்கிரம சமரசேகர
(2006 - 2018)

முன்னாள் பிரதிப் படைக்கலச் சேவிதர்கள்

எச். ஏ. பீ. வனசிங்க
(1982 - 1989)

வீ. பீ. கருணாரத்ன
(1991 - 1997)

இலங்கையில் படைக்கலச் சேவிதர் அலுவலகம், அதன் வரலாறு மற்றும் பணி, குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள்

பின்னணி

- படைக்கலச் சேவிதர் அலுவலகம், ஆங்கிலேய பாராளுமன்ற வரலாற்றின் ஆரம்பத்தில் அதன் பூர்வீகத்தைக் கொண்டுள்ளது.
- படைக்கலச் சேவிதர்கள், அடிப்படையில், மன்னர் ஒருவரின் மெய்ப்பாது காவலர் குழுவின் உறுப்பினர்களாவர்.
- இங்கிலாந்து நாட்டின் மன்னர் முதலாம் எட்வேட் கி. பி. 1279 இல் 20 படைக்கலச் சேவிதர்களைக் கொண்ட மெய்ப்பாதுகாவலர் குழுவொன்றை அமைத்தார்.
- பிரான்ஸ் நாட்டின் மன்னர் பிலிப் அகஸ்டஸ் 80 ஆண்டுகளுக்கு முன்னரே படைக்கலச் சேவிதர்களைக் கொண்ட மெய்ப்பாதுகாவலர் குழுவொன்றை கொண்டிருந்ததாக அறிக்கையிடப்படுகின்றது.
- பொதுமக்கள் சபையின் சபாநாயகரை கவனித்துக் கொள்வதற்காக இங்கிலாந்து நாட்டின் மன்னர் இரண்டாம் ரிச்சட் அவர்கள், கி. பி. 1415 இல் படைக்கலச் சேவிதர் ஒருவரை முதலில் நியமித்ததுடன் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் முதலாவது படைக்கலச் சேவிதராக நிக்கலஸ் மோடிட் நியமிக்கப்பட்டார்.
- கடந்த காலங்களில், படைக்கலச் சேவிதர்கள் ‘‘சேவிதர்’’, ‘‘செங்கோல் தாங்குபவர்’’, “Gentleman-Usher”, போன்ற பெயர்களால் அறியப்பட்டனர்.
- ஆரம்பத்தில், ‘‘சேவிதர்கள்’’ மன்னரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரின் வகிபங்கைக் கொண்டிருந்தனர்.
- பிரித்தானியப் பாராளுமன்ற முறைமை தோற்றம் பெற்றபோது, பிரதிநிதிகள் சபைக்கு மன்னர் தலைமை தாங்கும் வழக்கம் மாற்றமொன்றிற்கு உட்பட்டதுடன் அவருக்குப் பதிலாக மன்னரின் பிரதிநிதி என்னும் தகுதியுடன் சபாநாயகர் தலைமை தாங்க ஆரம்பித்தார்.
- சபாநாயகருக்கு மரியாதை வழங்கும் முகமாகவும் மன்னரின் அதிகாரத்தின் சின்னமாகவும், அப்போதுவரை மன்னரின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலராக விருந்த படைக்கலச் சேவிதருக்கு, செங்கோலிற்குப் பொறுப்பானவராக இருப்பதற்கான கடமை பொறுப்பளிக்கப்பட்டது.
- படைக்கலச் சேவிதர், செங்கோலைத் தாங்குபவராக, சபையின் சிறப்புரிமைகளின் பாதுகாப்புடன் அடையாளம் காணப்பட்டார். சபாநாயகர் பாதுகாவலராகவும் படைக்கலச் சேவிதர் அமுல்படுத்துநராகவும் கருதப்பட்டார்.
- சபையின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு சட்டரீதியான மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராக படைக்கலச் சேவிதர் உள்ளார்.

இலங்கையில் படைக்கலச் சேவிதர் அலுவலகம், அதன் வரலாறு

- செங்கோல் ஒன்றை வழங்கி படைக்கலச் சேவிதர் ஒருவரை நியமிப்பதன் தேவை அன்றிருந்த இலங்கைப் பாராளுமன்றத்தினால் 1931, யூலை 20 ஆந் திகதி முதல் தடவையாக கருத்தில் கொள்ளப்பட்டது.

- திருவாளர்களான அன்றிருந்த சபாநாயகர் சேர் பிரான்சிஸ் மொலமுரே, சுசந்த த பொன்சேகா, மேஜர் ஜே. டபிள்யூ. ஓல்ட்பீல்ட், MBE: டாக்டர் வீ. ஆர். சொக்மன், டி. டி. அதுலத்முதலி மற்றும் அன்றிருந்த அரச கழகத்தின் சபையின் செயலாளரான ஜீ. என். பர்கார் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழு இந்த விடயங்களை கருத்தில் கொண்டது.

- கலரிகளுக்கு விஜயம் செய்வோரை அனுமதிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கலாக படைக்கலச் சேவிதர் மற்றும் அவரின் பணியாட்டொகுதியினரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளையும் ஏனைய வேறு சில விடயங்களையும் 1933 மாச்சு மாதம் அரச கழகம் கருத்தில் கொண்டது.

- அரசியலமைப்பின் 65(3) ஆம் உறுப்புரையின் கீழ் படைக்கலச் சேவிதர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்படுகிறார். (தயவுசெய்து இணைப்பு “அ” வைப் பார்க்க)

- முதலாவது படைக்கலச் சேவிதர் 1947 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டதுடன் பிரித்தானிய பாராளுமன்றத்தின் பொது மக்கள் சபையால் 1949 ஆம் ஆண்டு செங்கோல் வழங்கப்பட்டது. (தயவுசெய்து இணைப்பு “ஆ” வைப் பார்க்க) திரு. எம். இஸ்மாயில், MBE முதலாவது படைக்கலச் சேவிதராக இருந்ததுடன் அவர் 1947 முதல் 1961 வரை இப்பதவியை வகித்தார். அதற்குப் பின்னர் கீழ்வருபவர்கள் இப்பதவியில் பின்தொடர்ந்தார்கள் :-

  திரு. ஜே. ஆர். த சில்வா - 1961 முதல் 1970 வரை
  திரு. ரொனீ அபேசிங்க - 1970 முதல் 1996 வரை
  திரு. விஜய பள்ளியகுருகே - 1996 முதல் 2006 வரை
  திரு. அனில் பராக்கிரம சமரசேகர - 2006 முதல் ஓகத்து 2018 வரை
  திரு. நரேந்திர பர்னாந்து - 2018 முதல் இன்றுவரை

- பாராளுமன்ற அதிகாரத்தின் சின்னமாகிய ‘‘செங்கோலின்’’ (தயவுசெய்து இணைப்பு “இ” யைப் பார்க்க) பாதுகாவலர் படைக்கலச் சேவிதர் ஆவார். சபையினுள் தலைமை வகிப்பவரால் இடப்படும் கட்டளைகளை நிறைவேற்றும் அலுவலராகவும் அவர் இருக்கிறார். தயவுசெய்து மேற்சபையின் (செனட்) செங்கோல் என்னும் இணைப்பு “ஐ” இனைப் பார்க்க.

- தலைமை தாங்குபவரின் அதிகாரத்துக்கு அடிபணியாமைக்காக அல்லது அதை அவமதித்ததற்காக அல்லது வேண்டுமென்றே பாராளுமன்ற நடவடிக்கைகளைத் திரும்பத் திரும்ப இடைமறிப்பு செய்ததற்காக அல்லது பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை மீறியதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு அல்லது உரிய உறுப்பினரை சபாகூடத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு தலைமை தாங்குபவரால் இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்கு படைக்கலச் சேவிதர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் 77 முதல் 80 வரையான நிலையியற் கட்டளைகள் நடைமுறைக்கு வரும். (தயவுசெய்து இணைப்பு “ஈ” வைப் பார்க்க)

- *ஏதேனும் சாட்சி, குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது வேறெவரேனுமாள் சபையின் தடை எல்லைக்கு முன்னால் அழைக்கப்படும்போது அத்தகைய ஆளை சபையின் தடை எல்லைக்கு அழைத்துச் செல்ல படைக்கலச் சேவிதர் அதிகாரமளிக்கப் பட்டுள்ளார்.*

- *சபாநாயகரின் எழுத்து மூல அல்லது வாய்மொழி மூல கட்டளை மூலமாக, பின்வருவனவற்றை மேற்கொண்டதாகக் கண்டறியப்படும் எந்த ஆளையும் பிடியாணையின்றி கட்டுக்காவலுக்குள் கொண்டுவருவதற்காகப் படைக்கலச் சேவிதருக்குத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற வளாகத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் அநாகரிகமான முறையில் நடந்த குற்றத்தை அல்லது கட்டிடத்தினுள் சட்டவிரோதமாக நுழைந்த அல்லது அமர்வு நாளின் போது தொந்தரவை ஏற்படுத்திய அல்லது அவ்வாறு செய்யுமாறு ஏனையோருக்கு ஆதரவு வழங்கிய ஆளை அவருக்குப் பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும் சட்டம் அல்லது நிலையியல் கட்டளையின் கீழ் ஏதாவது தண்டனை வழங்கப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பது தொடர்பாக பாராளுமன்றம் தீர்மானிக்கும் காலம் வரையில் பாதுகாப்பாகக் கட்டுக்காவலில் வைத்திருத்தல் (தயவுசெய்து இணைப்பு "ஈ" வைப் பார்க்க)*

- *கைது செய்யப்பட்டுள்ள அவ்வாறான ஆட்களைக் கையளித்தல் உள்ளடங்கலாக, சபாநாயகரால் வழங்கப்படும் கட்டளைகளின் மீது செயற்படுபவர் படைக்கலச் சேவிதராவார்.*

- *சபையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடயம் ஒன்றினை எழுப்புகையில் அந்த விடயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்துமாறு படைக்கலச் சேவிதர் பணிக்கப்படுகின்றார். மேலும், அந்த விடயத்தில் அவர் பக்கச்சார்பற்ற அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளார்.*

- *முறையற்ற விதத்தில் ஆடையணிந்து (அங்கீகரிக்கப்படாத ஆடை) சபையின் சபாபீடத்தினுள் நுழையும் எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் சபா மண்டபத்தை விட்டு வெளியே செல்லுமாறு வேண்டுவதற்கான அதிகாரத்தைப் படைக்கலச் சேவிதர் கொண்டுள்ளார். (தயவுசெய்து இணைப்பு "ஊ" வைப் பார்க்க)*

- *தனது கடமைகளை நிறைவேற்றுகையில் படைக்கலச் சேவிதர் சபா மண்டபத்தில் பிரதான கதவுக்கு அருகாமையில் விசேட இடத்தைக் கொண்டிருப்பார்.*

- *தனது வைபவ ரீதியான ஆடையின் அங்கமாக ஆயுதத்தை (வாள்) பாராளுமன்றச் சபா மண்டபத்தில் கொண்டுசெல்லக்கூடிய ஒரே ஆள் படைக்கலச் சேவிதர் ஆவார்.*

- *படைக்கலச் சேவிதர் பொதுநலவாயப் பாராளுமன்றத்தில் படைக்கலச் சேவிதர்களின் சங்கத்தின் உறுப்பினராவார் என்பதுடன் அவர் பாராளுமன்றத்தின் முகாமைத்துவம் பற்றிய நவீன மாற்றங்களுடன் பரீச்சயமடைவதற்காக அதன் அமர்வுகளில் பங்கு பற்றுகின்றார்.*

- *சபையின் சிறப்புரிமைகளின் பாதுகாவலரான சபாநாயகர் வழங்கும் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக சட்டரீதியாக வலுவூட்டப்பட்டுள்ள பிரதான அமுலாக்குனர் படைக்கலச் சேவிதர் ஆவார்.*

- *படைக்கலச் சேவிதரின் நியமனமும் ஓய்வும் பாரம்பரியமாக சபையில் அறிவிக்கப்படுகின்றன. சேவைப் பாராட்டுக்கான திகதி ஒதுக்கப்பட்டு படைக்கலச் சேவிதரின் ஓய்வின் போது சபையில் இது எடுத்துக்கொள்ளப்படும் (தயவுசெய்து இணைப்பு "எ" மற்றும் "ஏ" யைப் பார்க்க)*

- படைக்கலச் சேவிதரின் திணைக்களம் பாராளுமன்றத்தில் மிக முக்கியமான திணைக்களங்களில் ஒன்றாகும் என்பதுடன் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அடுத்ததாக மிகப் பழமையான அலுவலகமாகும்.
- படைக்கலச் சேவிதரின் தற்காலக் கடமைகள் நிர்வாகம் சார்ந்தவை என விபரிக்கப்பட முடியும். இவை சபை அலுவல்களில் பிரதானமானவையாகக் காணப்படுகின்றன.
- சபையின் சாதாரண அமர்வு நாட்களின் போது படைக்கலச் சேவிதர் வெள்ளை நிறத்திலான சீருடையினை அணிவார். வைபவங்கள் நிகழும் சந்தர்ப்பங்களில் அவர் விசேடமாக வடிவமைக்கப்பட்ட கறுப்பு நிறச் சீருடையினை அணிவார். படைக்கலச் சேவிதர் பதவியானது லெப்டினன்ட் ஜெனரல் பதவிக்குத் தரத்தில் நிகரானதாகும்.
- படைக்கலச் சேவிதரின் செயற்பாடுகளில் வைபவங்கள், சபா மண்டபம், பாதுகாப்பு, விருந்தினர் நிர்வாகம், வசதிகள், மற்றும் திணைக்களம் சார்ந்தவை அடங்குகின்றன. (குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய விபரமான பட்டியல் இந்த ஆவணத்தில் அடங்கியுள்ளது)
- தற்போதைய படைக்கலச் சேவிதர் திரு. நரேந்திர பர்னாந்து ஆவார். இப்பதவியின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்ற இவருக்கு பிரதிப் படைக்கலச் சேவிதர் திரு. குசான் ஜயரத்ன உதவி வழங்க அவருக்கு உதவிப் படைக்கலச் சேவிதரான திரு. அசிந்த குரே உதவி வழங்குகின்றார்.

பணி

சபாநாயகருக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும் உரிய நேரத்திலும் வினைத்திறன்மிகு முறையிலும் சாத்தியமிகு உயர்தரத்திலான சேவைகளை வழங்குவதன் மூலம் பாராளுமன்ற சபையின் செயற்றிறன் மிக்க செயற்பாட்டினை வசதிப்படுத்தல்

குறிக்கோள்கள்

வைபவ ரீதியானவை

- *பாராளுமன்றத்தினதும் சபாநாயகரினதும் வைபவங்களையும் செயற்பாடுகளையும் பொருத்தமான தராதரத்தில் ஏற்பாடு செய்தல் (அஞ்சலிக்கான ஈமச் சடங்கு நடவடிக்கைகள்)*

சபா மண்டபம்

- *சபாநாயகரின் பணிப்புரைகளை நிறைவேற்றி அச்செயற்பாடுகளை நிறைவேற்றல். சபையின் நிறைவேற்று அதிகாரம் மிக்கவர் என்ற ரீதியில் சபாநாயகரின் பணிப்புரைகளைப் படைக்கலச் சேவிதர் நிறைவேற்றுதல்.*
- *சபா மண்டபம் மற்றும் சபைக் குழுக்கள் வினைத்திறன்மிகு முறையில் செயற்படுவதை அதிகரிப்பதற்குத் தேவையான உதவிப் பணியாளர்கள் மற்றும் வசதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் சட்டவாக்கச் செயன்முறைக்கு உயர் தரத்திலான நேரடி உதவியினை வழங்கல்.*

பாதுகாப்பு

- *வன்முறை, விபத்து மற்றும் தீ போன்றவற்றினால் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் பணியாற்றுவோருக்கும் பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு வருகைதருவோருக்கும் ஏற்படக்கூடிய ஆபத்தைக் கட்டுப்படுத்திக் குறைப்பதன் மூலம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதி முழுவதிலும் பாதுகாப்பான சுற்றாடலையும் உட்கட்டமைப்பையும் வழங்கல்.*

- *பாராளுமன்றப் பொலிஸ் பிரிவின் ஒத்துழைப்புடன் செய்திறனுடனும் வினைத்திறனுடனும் பாராளுமன்றத்தினதும் அதன் சுற்றயல் பிரதேசத்தினதும் பௌதீகப் பாதுகாப்பினைப் பேணி பாராளுமன்ற வளவினுள் உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் விருந்தினர்களுக்கும் வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி சபாநாயகருக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும் பயன்மிகு ஆலோசனைகளை வழங்கல்.*

- *பாராளுமன்ற வளவினுள் ஒழுங்கைப் பேணல்.*

- *பாராளுமன்றக் கட்டடத் தொகுதியின் உயர் பாதுகாப்பு வலயத்தினைச் சுற்றி கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு பாதுகாப்பு அனுமதியினை வழங்குவதற்குப் பொருத்தமான பாதுகாப்புப் பரிசீலனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தல்.*

- *பின்வருவன உள்ளிட்ட பாராளுமன்றப் பாதுகாப்பு ஏற்பாடுகளை பாராளுமன்றப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளருடன் சேர்ந்து கூட்டாக நிர்வாகம் செய்தல்*

    - *நுழைவுக் கட்டுப்பாடுகள்*
    - *பாதுகாப்புப் பரிசீலனைகள்*
    - *பதிற்செயற்பாடு ஆற்றல் பராமரிப்பு*

- தொழில்நுட்பப் பாதுகாப்பு
- முப்படையினர், பொலிசார் மற்றும் புலனாய்வு முகவராண்மைகளுடன் இணைப்பு
- விசேடமான வளங்களுடன் ஒருங்கிணைப்பு
- வெளிநாட்டு முக்கியஸ்தர்களுடன் தொடர்புபடும் பெரும் நிகழ்வுகளைத் திட்டமிடுதல்
- விசேட வகுதி அச்சுறுத்தல்கள் தொடர்பாக திட்டமிடல்

வருகை தருவோர் நிர்வாகம்

- பாராளுமன்ற கட்டிடத்தொகுதிக்கு ஆட்களை அனுமதிப்பதை கட்டுப்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும்
- பாராளுமன்றத்திற்கான பாடசாலை விஜயங்கள் மற்றும் ஏனைய வருகை தருவோரை வசதிப்படுத்தல்.

இடவசதி

- பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கு பணியாற்றுவோர் மற்றும் பாராளுமன்றத்திற்கு வருகை தருவோருக்கு ஒரு தரமான சூழமைவையும் உட்கட்டமைப்பையும் வழங்குவதன் மூலம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியை வேலை செய்வதற்கும் வருகை தருவதற்குமான ஒரு நல்ல இடமாக இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- குழு மற்றும் நேர்காணல் அறைகளை குறித்தொதுக்குதல் உட்பட பாராளுமன்ற கட்டடம் பூராகவும் இடவசதி ஒதுக்குதல் தொடர்பில் மதியுரை வழங்குதல் மற்றும் நிர்வகித்தல்.

திணைக்கள ரீதியாக

- திணைக்கள வளங்களின் ஒட்டுமொத்த முகாமைத்துவம் மற்றும் தந்திரோபாய தலைமைத்துவத்தை வழங்கும் தனது நிறுவனத்தின் தலைவரின் வகிபங்கில் வினைத்திறனானதும் செயல்விளைவுடையதுமான ஆதரவை வழங்குதல். தரமான மதியுரையையும் வினைத்திறனானதும் செயல்விளைவுடையதுமான ஆதரவுச் சேவைகளையும் வழங்குதல்.
- இணங்கப்பட்ட நியமத்தில் பணிபுரிவோருக்கும் பாராமன்றத்திற்கு வருகை தருவோர் அனைவரும் அடைந்து கொள்ளக்கூடியதும் தொடர்புடையதுமான உயர்தர வாடிக்கையாளர் தொலைபேசி சேவைகளை வழங்குதல்.

தொழிற்பாடுகள்

வைபவ ரீதியானது

- *பிரதம வைபவ உத்தியோகத்தராக உரிய நியமத்தில் எல்லா பாராளுமன்ற வைபவ ரீதியான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தலும் நடாத்துதலும் (அரச மரணச் சடங்கு செயற்பாடுகள் உட்பட).*
- *மரபொழுங்கு விடயங்கள் தொடர்பில் சபாநாயகருக்கும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் மதியுரை வழங்குதல்.*
- *பதவிநிலையின் வைபவ ரீதியான கடமைகளின் செயலாற்றுகையில் அதி முக்கியத்துவமான அம்சமாக உள்ள செங்கோலின் காவலனாய் இருத்தல்.*
- *சபாநாயகருக்காவும், சபைக்காகவும் வைபவ ரீதியான நிகழ்வுகளையும் நிகழ்ச்சிகளையும் உருவாக்குதலும் விருத்தி செய்தலும் நிறைவேற்றுதலும்.*
- *சபாநாயகருக்கான உத்தியோகபூர்வ ஆடையணி/உத்தியோகபூர்வ இலச்சினை/ உத்தியோகபூர்வ கொடி மற்றும் உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளை வழங்குதல்.*
- *சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் விருந்தினர்களை (மிக மிக முக்கியமான ஆட்கள், மிக முக்கியமான ஆட்கள் ஆகியோரை) வரவேற்றல்.*
- *அமரத்துவம் அடைந்த சனாதிபதிகள் மற்றும் பிரதம அமைச்சர்கள் ஆகியோரின் உருவப்படங்களை திரைநீக்கம் செய்தல் உட்பட பாராளுமன்றத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உருவப்படங்களை காட்சிப்படுத்துவதுடன் தொடர்புடைய வேலை.*
- *பாராளுமன்றத்தில் தேசிய /மத வைபவங்கள் தொடர்பான வேலைகளை நடாத்தி வைத்தல்.*
- *பாராளுமன்றத்தால் ஒழுங்கு செய்யப்படும் மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றின் வைபவ ரீதியான தொழிற்பாடுகளை நடாத்துதல்.*

சபைக்கூடம்

- *அமர்வு தினத்தின் ஆரம்பத்தின்போது சபைக்கு நுழைகையில், செங்கோலுடன் சபாநாயகருடன் சமுகமளித்தல்.*
- *முழுச்சபையும் ஒரு குழுவாக இருக்கையில் அல்லது சபையில் சபை அமர்வு இடம்பெறும்போது முழுநேரமும் சபைக்கூடத்தில் பிரசன்னமாக இருத்தல்.*
- *சபை அமர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது சபையின் சுற்றாடலில் ஒழுங்கைப் பேணல்.*
- *பாராளுமன்றத்தின் புதிய உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் / உறுதிப்பாட்டை எடுத்துக்கொள்வதற்கு சபைக்கு அழைத்துச் செல்லுதல், தலைமை தாங்கும் உத்தியோகத்தர், ஒதுக்கப்பட்ட ஆசனம் என்பவற்றுக்கு கூட்டிச் செல்லல் என்பவற்றை வசதிப்படுத்தல்.*
- *சபாநாயகரின் ஆணைகள், சபையின் கட்டளைகளுக்கு சேவையாற்றச் செய்தல் அல்லது சேவையாற்றுதல்.*

- சபையால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்படும் எல்லா ஆட்களையும் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல்.
- சாட்சியாக விசாரிக்கப்படுவதற்கு அல்லது எச்சரிக்கை செய்யப்படுவதற்காக காவலில் உள்ள ஆட்களை சபைக்குக் கொண்டுவருதல்.
- இருக்கை அமர்வுத் திட்டத் தயாரிப்புடனும் சபாநாயகரின் அங்கீகாரத்துடனும் பாராளுமன்றத்தின் சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் இருக்கைகளை ஒதுக்குதல்.
- சபையின் பார்வையாளர் இருக்கை மற்றும் நுழைவு மண்டபம் என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் ஒழுங்கைப் பேணுதலும்.
- பிரதான குழு கூடும் அறையில் அல்லது எந்தப் பகுதியிலும் அல்லது பார்வையாளர் பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தும் அல்லது சபை அல்லது பிரதான குழுக் கூட்டம் இடம்பெறும் அதேவேளையில் வெளியேறுவதற்கு புறத்தோர் பணிக்கப்பட்ட போது அவ்வாறு வெளியேறாத ஆட்களையும் வெளியேற்றுதல்.
- பாராளுமன்ற சேவைகள் உதவியாளர்களை வழங்குவதன் மூலம் சபைக்கூட ஆதரவுச்சேவைகள்.
- சபையின் ஒவ்வொரு அமர்வு தினங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகையை பதிவுசெய்தல் உறுதிப்படுத்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் மூப்பு நிரலைத் தயாரித்தல்.

பாதுகாப்பு

- பாதுகாப்பு விடயங்களில் சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு மதியுரை வழங்கல்.
- சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் தொடர்பான விடயங்களைக் கவனித்தல், பாராளுமன்ற கட்டிடத்தில் அவர்களின் பிரசன்னம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- பாராளுமன்ற சபை, சபைச் சுற்றுப்புறங்கள், ஏனைய பிரிவுகள் மற்றும் தொடர்புடைய பகுதிகளில் பாதுகாப்பு.
- உணவு நஞ்சாதல் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பான விடயங்கள்.
- சிறந்த ஆனால் தடங்கலற்ற முறையில் சபைக்கான உரிய பாதுகாப்பை வழங்குதல்.
- சபாநாயகரின் கட்டளையுடன் பாராளுமன்றக் கட்டிடத்தொகுதியினுள் வீடியோ படமாக்குதல் மற்றும் புகைப்படம் எடுத்தலைக் கட்டுப்படுத்தல்.
- பாராளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பாக பாராளுமன்ற பொலிஸ் பிரிவுடன் இணைந்து செயற்படல்.
- பாராளுமன்ற பாதுகாப்பு தொடர்பாக சபாநாயகரால் தலைமை தாங்கப்படும், இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிசார் மற்றும் புலனாய்வு முகவராண்மைகள் என்பவற்றின் பாதுகாப்புக் கூட்டங்களை ஒழுங்கு செய்தலும் அவ்வாறான நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தலும்.
- பாராளுமன்றக் கட்டிடத்தின் திறப்புக்களை (1000 அளவானவை) பேணுதலும் முகாமைத்துவம் செய்தலும்.

- பாராளுமன்றக் கட்டடத்தொகுதியின் சுற்றாடலில் /வெளிச்சுற்று வட்டத்திற்கு அணித்தாக இடம்பெறும் பல்வேறுபட்ட பொதுநிகழ்வுகள் நடாத்தப்படுவதற்கு அனுமதியளித்தல்.
- பாராளுமன்றக் கட்டிடத்தொகுதியிலும் அதன் பிரிவுகளிலும் பணியாற்றும் பணியாட்தொகுதியினரின் பாதுகாப்பு அனுமதி விடயங்கள்.
- புறத்தோரை அகற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கட்டுப்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும், அத்துடன் ஒழுங்குமுறையற்ற வகையில் சபைக்குள் நுழைவைப் பெற்றுக் கொண்ட அல்லது பிழையாக நடந்துகொண்டவர்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளல்.

பின்வருவனவற்றை வழங்குதல்

- அரச உத்தியோகத்தர்கள் அறைக்கான அனுமதிப்பத்திரங்கள்
- அரச உத்தியோகத்தர்களின் அனுமதிப்பத்திரங்கள்
- அமைச்சரவை அமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்கள் மற்றும் பிரதம செயலாளர் உத்தியோகத்தர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள்
- உணவு அறை அனுமதிப்பத்திரங்கள்
- ஏனைய பணியாட்டொகுதியினர் /தற்காலிக பணியாட்டொகுதி வழங்குநர்கள் ஆகியோரின் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள்
- பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் பணியாற்றும் பணியாட்டொகுதியினருக்கான வாகன நுழைவு அனுமதிப்பத்திரங்கள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட வகைகளுக்கான வாகன நுழைவு அனுமதிப்பத்திரங்கள்
- உறுப்பினர்களின் வாகனங்களைச் செலுத்துவோருக்கான நுழைவு அனுமதிப்பத்திரங்கள்
- ஊடக அறிக்கையாளர்கள் மற்றும் ஊடக செய்தியாளர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள்
- அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வருகை தருபவர்களுக்கான வர்ண தற்காலிக நுழைவு அனுமதிப்பத்திரங்கள் (தள/பகுதி வாரியாக)
- அமர்வு தினங்கள் தொடர்பில் பொதுமக்கள் கலரிக்கான அனுமதிப்பத்திரங்கள் மிக முக்கிய ஆட்களுக்கான கலரி அனுமதிப்பத்திரங்கள்
- பாராளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொள்வதற்கான பாடசாலைகளுக்கான அனுமதிக் கடிதங்கள்
- பல்வேறுபட்ட அமைச்சுகள், திணைக்களங்களின் விரைதூதுவர்களுக்கான (dispatch riders) அனுமதிக்கடிதங்கள்
- நுழைவு அனுமதிப்பத்திரங்கள்
- செல்லிடத்தொலைபேசி, மின்னியல் /இலத்திரனியல் கருவிகள் மற்றும் ஊடக உபகரணங்கள் என்பவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள்
- விடுமுறை தினங்கள் உட்பட வேலை நேரம் அல்லாத வேளைகளில் வேலை செய்வதற்கான அனுமதிக் கடிதங்கள்
- பாராளுமன்ற /ஏனைய பணியாட்டொகுதி உத்தியோகத்தர்களின் அறைக்கான அனுமதிப்பத்திரங்கள்
- சபை /முகப்புக்கூட அனுமதிப்பத்திரங்கள்

- ***பின்வருவோருக்கு பாராளுமன்ற அடையாள அட்டைகளை வழங்குதல் :***

    - *பாராளுமன்ற உறுப்பினர்கள்*
    - *முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்*
    - *பாராளுமன்ற கௌரவ உத்தியோகத்தர்கள்*
    - *பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள்*
    - *பாராளுமன்றத்தின் ஏனைய பணியாட்டொகுதியினர்*
    - *பாராளுமன்றத்தின் துணைப் பணியாட்டொகுதியினர்*
    - *பாராளுமன்றப் பொலிஸ், பாராளுமன்ற ஊடகவியலாளர்கள்*
    - *பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் ஓய்வு பெற்ற பணியாளர்கள்*

- *பாராளுமன்ற சுற்றாடலினுள் தளத்தில் வாகனங்கள் தரித்து நிற்பதற்கான கட்டுப்பாடு*
- *தீயணைப்பு உபகரணங்களைப் பேணுவது தொடர்பான வேலை ஒத்திகை நடத்துதல் மற்றும் தீயணைப்பு பயிற்சிகள்.*
- *எக்ஸ் கதிர் பரிசோதிப்பு முறைமையின் பேணுகை தொடர்பான வேலை.*
- *பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள் போன்ற வைபவரீதியான நிகழ்வுகள் தொடர்பான பாதுகாப்பு சம்பந்தமான அனைத்து பணிகளையும் நிறைவேற்றுதல்.*
- *விடுமுறை நாட்கள் உள்ளடங்கலாக கடமை நேரம் அல்லாத நேரங்களில் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு எழுந்தமானதாக விஜயம் செய்வதும் மற்றும் விடுமுறை நாட்களிலும் அலுவலக நேரத்துக்குப் பின்னரும் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் அவசர நிலைமைகளின் போது தேவையான கருமங்களை நிறைவேற்றல்.*

விஜயம் செய்பவர்களை நிர்வகித்தல்

- *பாராளுமன்ற கட்டடத்தொகுதியினுள் ஆட்களை அனுமதிப்பதை கட்டுப்படுத்துவதும் ஒழுங்குபடுத்துவதும்.*
- *ஊடக நிலையத்துக்கும் ஏனைய கலரிகளுக்குமான ஆட்களை அனுமதிப்பதை கட்டுப்படுத்துவதும் ஒழுங்குபடுத்துவதும்.*

இட வசதி

- *குழு அறைகள், நேர்காணல் அறைகள், கலரிகள் போன்றவற்றின் முன்பதிவுக்கான சேவைகளை வழங்குதல்.*
- *துணைப் பணியாட்டொகுதி உள்ளடங்கலாக உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாட்டொகுதி ஆகியவர்களுக்கு கட்டடத்தின் நிலைமைக்கும் மற்றும் உரிய வழிகாட்டு நெறிகளுக்கும் அமைவாக இடவசதியை வழங்கி உறுப்பினர்களுக்கும் திணைக்களத்துக்குமான இடவசதியை நிர்வகித்தல்.*

- *அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் போன்றவர்களுக்கு அறைகளை ஒதுக்குதல்.*
- *பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் திணைக்களத்தின் சீருடை அணியும் பணிட்டொகுதியினருக்குமாக பூட்டுப்பெட்டிகளை* (lockers)/*சிற்றலுமாரிகளை* (Cupboards) *ஒதுக்குதல்*

திணைக்களம்

- *செயற்றிட்டம், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய உரிய அறிக்கைகள் பத்திரங்கள், கூட்ட அறிக்கைகள், கடிதங்கள் போன்றவற்றை தயாரித்தல்.*
- *சபையின் தளபாடங்கள் மற்றும் பொருத்துறுப்புகள் என்பவற்றைப் பாதுகாப்பாக பேணும் பொறுப்பு.*
- *சபாநாயகர் மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியவர்களின் பணிப் புரையின் மீது உத்தியோகபூர்வ ஈமச்சடங்குகளுக்காக மலர் வளையங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தல்.*
- *காட்சிப் பலகைகள் போன்றவற்றுடன் தொடர்பான கருமங்கள்.*
- *உரிய நேரத்தில் துல்லியமான முறையில் சபை பற்றியும் அதன் உறுப்பினர்கள் பற்றியும் தகவல்களை வழங்குதல்.*
- *பாராளுமன்றம் பற்றிய விவரணம் தொடர்பான கருமங்கள்.*
- *பின்வரும் பணியாட்டொகுதியின் ஒட்டுமொத்த கட்டுப்பாடும் முகாமைத் துவமும் (140 பேர்)-*
    - *பிரதிப் படைக்கலச் சேவிதர் (01)*
    - *உதவிப் படைக்கலச் சேவிதர் (01)*
    - *படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் அலுவலர்கள் (05)*
    - *அணுகல் கட்டுப்பாட்டு அறையின் அலுவலர்கள் (01)*
    - *தொலைபேசி மேற்பார்வையாளர் (01)*
    - *ஆரச்சி (01)*
    - *வரவேற்பாளர்கள் (17)*
    - X-*கதிர் பரிசோதகர்கள் (08)*
    - *தொலைபேசி இயக்குநர்கள் (09)*
    - *பாதுகாப்பு அலுவலர்கள் (15)*
    - *பாராளுமன்றச் சேவை உதவியாளர்கள் (77)*
    - *தளபாடம் மினுக்குநர்கள் (04)*
- *கலரி அனுமதிப் பத்திரங்கள், ஏனைய அனுமதிப் பத்திரங்கள், படிவங்கள் போன்றவற்றுடன் தொடர்பான திணைக்களத்தின் அனைத்து அச்சுப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.*
- *திணைக்களத்தில் பணியாட்டொகுதியின் சம்பளப் படியேற்றம், பதவியுயர்வு, பயிற்சி வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்கு சிபாரிசு செய்தல்.*
- *ஏனைய அலுவலகங்களுக்கு பாராளுமன்ற சேவை உதவியாளர்களின் மனித வலு உதவிகளை வழங்குதல்.*
- *திணைக்களத்தின் பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு.*
- *திணைக்களத்தின் வருடாந்த நகல் மதிப்பீடுகளை தயாரித்தல்.*
- *தற்காலிக வர்ண அனுமதிப் பத்திரங்களை வடிவமைத்து அச்சிட்டு விநியோகித்தல்.*

- *பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்ற பணியாட்டொகுதியினதும் வரவை உறுதிசெய்தல்.*
- *பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்களை பாராளுமன்ற இணையத்தளத்திற்கும் பாராளுமன்ற பணியாட்டொகுதியின் படங்களை பாராளுமன்ற இணையத்தள நுழைவாயிலுக்கும் பதிவேற்றம் செய்தல்.*
- *பாராளுமன்றத்துக்கான உபகரணங்கள் /களஞ்சியம் மற்றும் ஏனைய பொருட்கள் / சேவைகள் ஆகியவற்றின் கொள்வனவு தொடர்பாக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையில் தவிசாளராக சேவை புரிதல்.*
- *திணைக்களத்தின் பணியாட்டொகுதியினருக்கு காலத்துக்கு காலம் உள்ளக சுற்றறிக்கைகளை விநியோகித்தல்.*
- *வரவேற்பாளர்கள், X-கதிர் பரிசோதகர்கள், தொலைபேசி இயக்குநர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோருக்கான மாதாந்த வேலை முறையேட்டைத் தயாரித்தல்.*
- *பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடனான கூட்டங்கள் உள்ளடங்கலாக பணியாட்டொகுதியினருக்கான கூட்டங்களை கிரமமாக ஏற்பாடு செய்வதும் அத்தகைய பணியை நிறைவேற்றுவதும்.*
- *நினைவுப் பொருள் விற்பனை நிலையம் /களஞ்சியத்தின் கட்டுப்பாடும் முகாமைத்துவமும்.*
- *கோவைச் சுட்டியைப் பேணுவது, கடமைகளின் கையளிப்பு மற்றும் கடமைகளின் பட்டியல் /வேலை முறையேடு மற்றும் உரிய திருத்தங்கள் ஆகியவற்றை திணைக்களத்தில் பணியாட்டொகுதியினருக்கு காலத்துக்கு காலம் விநியோகித்தல்.*
- *பாராளுமன்ற உறுப்பினர்களின் பூட்டுப்பெட்டிகள் உள்ளடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்களின் பொழுதுபோக்கு அறையின் கட்டுப்பாடும் முகாமைத்துவமும்.*
- *நுழைவாயிலில் உள்ள வரவேற்பு கரும பீடத்துக்கு தினமும் கிடைக்கும் மின்னஞ்சல், கடிதங்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றை வகைப்படுத்தி விநியோகிக்கும் பணி தொடர்பாக பணிப்புரை வழங்குதல் /மேற்பார்வை செய்தல்.*
- *பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் தளபாடங்களை மினுக்கும் அனைத்து பணிகளும்.*
- *சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்கள் பணியாட்டொகுதியினர் போன்றவர்களுக்கு உரிய நேரத்தில் வினைத்திறனான தொலைபேசி சேவைகளை வழங்குதல்.*
- *கழிவுத் தாள்கள்/*CD/ DVD *ஆகியவற்றை அப்புறப்படுத்தும் பணிக்கு வசதியளித்தல்.*
- *பாதுகாப்பு அலுவலர்களையும் உரிய பணியாட்டொகுதியினரையும் விடுமுறை நாட்கள் உள்ளடங்கலாக அலுவலக நேரங்கள் அல்லாத நேரங்களில் பணியாற்றுவதற்காக ஒதுக்குதல்.*
- *படைக்கலச் சேவிதர் திணைக்களம்; இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்; நிர்வாகத் திணைக்களம்; ஹன்சாட் திணைக்களம் ஆகியவற்றின் பணிகளை நிறைவேற்றும் சீருடை அணியும் பணியாட்டொகுதியினரின் சீருடைகளை துவைத்தல் தொடர்பான பணி.*

- கொள்வனவுகளுக்கான / பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்கான கட்டண கொடுப்பனவுகளை சிபாரிசு செய்வதும் அங்கீகரிப்பதும்.
- திணைக்கள மட்டத்திலான விசாரணைகளின் போது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட விசாரணை அலுவலராக / வழக்குத் தொடுக்கும் அலுவலராக சேவை புரிதல்

படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் ஆக்க அமைப்பு

தளபாடம் மினுக்குனர்	**04**
பாராளுமன்றச் சேவை உதவியாளர்கள்	**77**
பாதுகாப்பு அலுவலர்கள்	**15**
X-கதிர் பரிசோதகர்கள்	**08**
வரவேற்பாளர்கள்	**17**
தொலைபேசி இயக்குநர்கள்	**09**
தொலைபேசி மேற்பார்வையாளர்	**01**
ஆரச்சி	**01**
அணுகல் கட்டுப்பாடு அறை	**01**
அலுவலகம்	**05**
உதவிப் படைக்கலச் சேவிதர்	**01**
பிரதிப் படைக்கலச் சேவிதர்	**01**
படைக்கலச் சேவிதர்	**01**

படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு


படைக்கலச் சேவிதர் (01)
பிரதிப் படைக்கலச் சேவிதர் (01)
உதவிப் படைக்கலச் சேவிதர் (01)
அலுவலக பணியாட்டொகுதி (05)
அணுகல் கட்டுப்பாடு அறை (01)
தொலைபேசி மேற்பார்வையாளர் (01)
தொலைபேசி இயக்குனர்கள் (09)
ஆரச்சி (01)
வரவேற்பாளர்களும் நினைவுப் பொருள் விற்பனை நிலைய அலுவலர்களும் (17)
X - கதிர் பரிசோதகர்கள் (08)
பாராளுமன்றச் சேவை உதவியாளர்கள் (77)
தளபாடம் மினுக்குனர்கள் (04)
பாதுகாப்பு அலுவலர்கள் (15)

பின்னிணைப்பு - அ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையின் ஒரு பகுதி

உறுப்புரை 65(3) - பாராளுமன்ற பணியாட்டொகுதி நியமனம் தொடர்பானது

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

65.(1) *[பாராளுமன்றத்துக்குச் செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும்: அவர் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்: அத்துடன் அவர் நன்னடத்தையுடையவராகவுள்ள காலத்தின் போது அப்பதவியை வகித்தலும் வேண்டும்.]

(2) செயலாளர் நாயகத்தின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்: அது திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்: அத்துடன், அவரது பதவிக் காலத்தின் போது அது குறைக்கப்படுதலும் ஆகாது.

(3) செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் சம்பளங்கள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படல் வேண்டும்.

(5) செயலாளர் நாயகத்தின் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும் : அதாவது -

(அ) அவர் இறப்பதன் மேல்:

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்திலான கடிதத்தின் மூலம் அவர் பதவி துறப்பதன் மேல்:

(இ) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலன்றி, அறுபது வயதினை அவர் அடைவதன் மேல்:

(ஈ) உடல் நலமின்மை காரணமாக அல்லது உடற்பலவீனம் காரணமாக அல்லது மனப்பலவீனம் காரணமாக சனாதிபதியினால் அவர் அகற்றப்படுவதன் மேல்: அல்லது

(உ) பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின் மீது சனாதிபதியினால் அவர் அகற்றப்படுவதன் மேல்.

(6) **[செயலாளர் - நாயகம் அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ள போதெல்லாம், செயலாளர் நாயகத்தின் இடத்தில் பதிற்கடமை ஆற்றுவதற்கென ஆளொருவரை அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதி நியமிக்கலாம்.”

பின்னிணைப்பு - ஆ

1949, சனவரி 11 ஆந் திகதிய ஹன்சாட் அறிக்கையின் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி

பக்கங்கள் - 763 மற்றும் 764

விடயம் : பொதுச்சபையிடமிருந்து ஆசனம் மற்றும் செங்கோல் போன்றவற்றை வழங்குதல்



Annexure "B"

An Extract of the Hansard of the 11th January, 1949

Pages – 763 and 764

Re :Presentation of Chair and Mace from the House of Commons

763—Presentation of Chair & Mace 11 JANUARY 1949

from House of Commons 764

HOUSE OF REPRESENTATIVES

Tuesday 11th January, 1949.

The House met at 2 p.m., MR. SPEAKER [THE HON. MR. A. F. MOLAMURE] in the Chair.

OATH OF ALLEGIANCE.

Dr. V. R. Schokman (Appointed Member) took and subscribed the Oath of Allegiance required by law; and signed the Book at the Table.

PRESENTATION OF CHAIR AND MACE FROM THE HOUSE OF COMMONS

The Serjeant at Arms: Mr. Speaker, I have to report that a Delegation sent by the Commons House of Parliament of Great Britain and Northern Ireland to present a Speaker's Chair and a Mace to the House of Representatives, Ceylon, is inquiring if this Honourable House would be pleased to receive them.

Mr. Speaker: Is it the wish of the House that the Delegation be admitted?

Hon. Members: Aye!

Mr. Speaker: Yes, admit them, please.

The Delegation, consisting of:—

Major The Right Hon. James Milner, M.C., T.D., D.L., LL.B., M.P., Deputy Speaker, House of Commons;

Major The Right Hon. G. Lloyd-George, M. P.;

Captain L. D. Gammans, M. P.;

T. W. Burden, Esq., C.B.E., M.P.;

attended by—

E. A. Fellowes, Esq., C.B., M.C., Clerk Assistant, House of Commons; and

C. J. Harris, Esq., C.B.E.

were admitted to the Bar by the Serjeant at Arms.

The Serjeant at Arms: Mr. Speaker, the Delegation from the House of Commons.

Mr. Speaker: I welcome you, Gentlemen, on behalf of this House. Pray be seated.

[The Delegation having taken their seats]—

2——J. N. 18606 (2/49)

2.08 P.M.

Mr. Speaker: Hon. Members of the House of Representatives, and hon. Members of the Delegation from the British House of Commons.—It is with feelings of sincere friendship that I, as the mouthpiece of this House, welcome you Gentlemen from across the seas. The gesture of the House of Commons in presenting this House with the two symbols of dignity and authority we welcome and appreciate, the more so, because we realise that gesture emanated from the feelings of high regard and esteem which you Members of the Mother of Parliaments bear towards us, the youngest Parliament of a free and independent country.

The Speaker's Chair, as you well know, stands for the majesty and dignity of the House. In itself—a vacant emblem—but yet, inspiring feelings of restraint and obedience, it is the structure which lends majesty to the House. The Chair, which you are about to present, is an imposing one, and I am sure will always be looked upon with feelings of affection and dignified esteem.

As for the Mace, every one will admi that it is a thing of beauty, designed and carried out by your craftsmen o lines indicated by us. Each emblem i it has some particular meaning for u of the East. In short, the variou emblems denote Purity, Perpetuity Progress, Plenty and Prosperity, an the whole of it denotes the power an authority not only of the Chair, but als of this House, to safeguard the righ and privileges which are the heritage o a democratic institution such as o House is.

I have no doubt that every Membe of this House, whether he be here o not, will pay that respect, regard an honour due to these two emblems whi must necessarily remind hon. Membe of this House of their solemn duty, an the great traditions which they ha undertaken to uphold.

I must not say more, but conclu by adding my personal appreciation a thanks to the Resolution of than which will be moved now.

Once again, on behalf of the House offer you, Gentlemen, a very cord welcome.

பின்னிணைப்பு - இ

“செங்கோல்”

பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னமாகத் திகழும் செங்கோல் 1949 சனவரி 11 ஆந் திகதி பிரித்தானிய மற்றும் வட அயர்லாந்து பாராளுமன்றத்தின் பொதுச் சபையால் இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அன்றைய பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் சேர் அலெக்ஸாண்டர் பிரன்சிஸ் மொலமுரே அவர்கள் தலைமைதாங்கிய பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் பொதுச் சபையின் பிரதிச் சபாநாயகர் மேஜர் ரைட் கௌரவ ஜேம்ஸ் மில்னர் அவர்களின் தலைமையிலான தூதுக்குழுவினர் அப்போதைய படைக்கலச் சேவிதர் திரு. எம். இஸ்மாயில், MBE அவர்களுக்கு இச்செங்கோலைக் கையளித்தனர். செங்கோல் முன்னால் வைக்கப்பட்டு சபை கூட்டப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக அது காணப்பட்டது.

செங்கோலின் அப்போதைய பெறுமதி 2,500 பவுண்களாகக் காணப்பட்டது. அது 28 இறாத்தல் நிறையைக் கொண்டுள்ளதோடு 48 அங்குல நீளமுடையது. கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியின் கலைத் துறையில் கடமையாற்றிய மறைந்த திரு. எஸ். பி. சார்ள்ஸ் மற்றும் அவருடைய சக பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட வரைபை செங்கோலின் வடிவமைப்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது. அப்போதைய தொல்பொருளியல் திணைக்கள ஆணையாளர் கலாநிதி செனரத் பரணவிதான அவர்களின் அங்கீகாரத்தை வடிவமைப்பு தொடர்பான புராணயியல் கொண்டிருந்தது. பக்கிங்ஹாம் மாளிகைக்கு ஆபரணங்களை விநியோகிக்கும் இங்கிலாந்திலுள்ள M/S Gerrads (Pvt) Ltd இன் பிரபல்யமான பொற்கொல்லர் திரு. டேனியல் இஸ்பென்சர் அவர்களால் இச்செங்கோல் தயாரிக்கப்பட்டது. செங்கோலில் உள்ள கருங்காலி மற்றும் நீலமாணிக்கக்கற் பகுதிகள் இலங்கையிலிருந்து விநியோகிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது.

இலங்கையின் பண்டைய விகாரையின் கட்டடவியல் இந்த வடிவமைப்பில் செல்வாக்குச் செலுத்தியதுடன், அலங்காரம் தாமரையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. விரிந்த தாமரை முடிவின்மை மற்றும் அழகு போன்றவற்றிற்கான சின்னமாகக் காணப்படுவதுடன் குவிந்த தாமரை நிறைவான சமாதானத்தை எடுத்துக்காட்டுகிறது.

இச்செங்கோல், கருங்காலி மரத்தினால் செய்யப்பட்டு, வெள்ளி, 18 கரட் தங்கம், நீலமாணிக்கக்கற்கள் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அடிப்பகுதி வெள்ளி மற்றும் தங்கத்தினாலான குவிந்த தாமரையால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது பிடி பொறிக்கப்பட்ட இரு தங்கப் பட்டிகளைக் கொண்டுள்ளது. அதன் மேல், நீண்டதாகப் பொறிக்கப்பட்ட தங்கப் பட்டிகளைத் தாங்கும் நீலமாணிக்கக் கற்களினாலான பட்டி காணப்படுவதுடன் அதன் மேல் எண்கோண வடிவிலான வெள்ளிப் பிடியொன்றும் காணப்படுகின்றது. இது, பகரமாக, நீலமாணிக்கக்கற்கள் மற்றும் தங்க மணிகள் தொங்கும் பூமியின் நாலாபக்கங்களையும் உருமாதிரியமைக்கும் தாமரை வடிவில் காணப்படும் வெள்ளி மற்றும் 18 கரட் தங்கத்தினாலான நான்கு பகுதிகளுக்கும் உறுதுணையளிக்கிறது. நிலைத்திருக்குந்தன்மையின் அடையாளம் சூரியன் மற்றும் சந்திரன், முன்னேற்றத்தின்

அடையாளம் சக்கரம் மற்றும் செழிப்பின் அடையாளம் பூக்கிண்ணம் (பூரண கும்பம்) போன்ற நான்கு சின்னங்கள் செதுக்கப்பட்ட கன சதுரமொன்று இதன் மேலே காணப்படுகிறது. இதன் மேல் காணப்படும் பெரிய இரு வாளேந்திய சிங்கள சிங்கங்கள் பொறிக்கப்பட்ட வெள்ளிக் கோளம் செங்கோலின் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. இக்கோளத்தின் மேல் தூய்மையின் அடையாளமான தாமரை, நீலமாணிக்கக்கற்களினாலான இன்னுமொரு பட்டி மற்றும் எண்கோண வடிவ மெருகூட்டப்பட்ட பளிங்கு முனையமும் காணப்படுகிறது.

பாராளுமன்றத்தினதும் பாராளுமன்றத்தினூடாக சபாநாயகரினதும் அதிகாரச் சின்னமாக செங்கோல் விளங்குவதால், பாராளுமன்றத்தின் அடையாளங்களின் முக்கிய பகுதியொன்றாக செங்கோல் காணப்படுகின்றது. செங்கோல் இன்றி பாராளுமன்றம் சட்டவுருப்பெறாது என்பதுடன் எவ்வித அமர்வுகளும் இடம்பெற முடியாது. சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்ந்திருக்கும் போது, அதாவது, பாராளுமன்ற அமர்வு இடம்பெறுகின்றபோது பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் மேசைக்குக் கீழ் காணப்படும் மேற்தாங்கிகளில் செங்கோல் அரச தரப்பை நோக்கி எண்கோணத்தினாலான மெருகூட்டப்பட்ட பளிங்கு முனையம் வைக்கப்பட்டிருக்கும். சபாநாயகர் அக்கிராசனத்திலிருந்து வெளியேறும் போது, அதாவது பாராளுமன்றம் குழுவொன்றாக அமரும்போது பாராளுமன்றம் முறையாக சட்டவுருப்பெறவில்லை என்பதைக் காட்டுவதற்கு மேசையின் கீழுள்ள தாழ்வான தாங்கிகளுக்கு செங்கோல் மாற்றப்படும்.

குறிப்பாக புதிய சபாநாயகரின் தெரிவு போன்ற பல பாராளுமன்ற நிகழ்வுகளில் இன்றியமையாததொரு கூறாக செங்கோல் காணப்படும். வாக்கெடுப்பு செங்கோலின்றி இடம்பெற முடியாது.

பொதுத் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் செங்கோல் படைக்கலச் சேவிதரால் பாராளுமன்ற சபாமண்டபத்துக்கு கொண்டு வரப்பட்டு மேசையின் கீழுள்ள தாங்கிகளின் மீது வைக்கப்படும். சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டு அக்கிராசனத்தில் அமர்ந்த பின்னர் மேசையின் மேலுள்ள தாங்கிகளில் படைக்கலச் சேவிதர் செங்கோலை வைப்பார்.

சபாமண்டபத்துக்கு வரும்போதும், அதிலிருந்து வெளியேறும் போதும் படைக்கலச் சேவிதர் தமது வலது புயத்தில் செங்கோலைத் தாங்கிச்செல்ல, சபாநாயகர் பிரதி படைக்கலச் சேவிதரால் வழிநடாத்தப்படுவதுடன் பாராளுமன்ற செயலாளர் நாயகமும் அவரது பிரதி செயலாளர்களும் சபாநாயகரைப் பின்தொடர்வர். சபாநாயகரின் பிரசன்னத்தை பிரதி படைக்கலச் சேவிதர் சபைக்கு அறிவிப்பார்.



செங்கோலின் வடிவமைப்பு


பளிங்கு
வெள்ளி
தங்கம்
தாமரை மலர்
தாமரை இதழ்
வெள்ளி
கோளத்தின் நடுவில் சிங்கம்
சிங்கள
சிங்கம்
சூரியன்
தங்கம்
தாமரை
வெள்ளி
திண்ம அமைப்பு
தங்கம்
வெள்ளி
போதிகை
சந்திரன்
தூண் தலை
சிங்கள
அலங்காரம்
வெள்ளி
இரத்தினக்கல்
சக்கரம்
சிங்கள
அலங்காரம்
கருங்காலி
நிறை குடம்
தங்கம்
வெள்ளி
தங்கம்
சிங்கள
அலங்காரம்
தங்கம்
தாமரை
சிங்கள
அலங்காரம்
கருங்காலி
வெள்ளி
தாமரை
தங்கம்

சதுரத்தின் நாலாபக்கங்களிலும் சூரியன், சந்திரன், சக்கரம், நிறை குடம்.

எஸ். ப். சார்ள்ஸ்
1947.12.23

பின்னிணைப்பு - ஈ

பாராளுமன்றத்தில் ஒழுங்கு

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளிலிருந்து (நி.க. 77-80) பிரித்தெடுக்கப்பட்டவை

- “77. (1) ஓர் உறுப்பினர் அக்கிராசனத்தின் அதிகாரத்தைப் புறக்கணித்தல், வேண்டுமென்றும் விடாப்பிடியாகவும் பாராளுமன்றத்தின் அலுவலுக்கு தடை ஏற்படுத்தல் அல்லது வேறெவ்வகையிலாவது பாராளுமன்றத்தின் விதிகளைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்ற குற்றச்சாட்டுகளைப் புரிந்தவுடன் சபாநாயகர் அவ்வுறுப்பினரைப் பெயர் குறிப்பிட்டு “குறித்த அவ்வுறுப்பினர் பாராளுமன்றத்தின் சேவையின்றும் இடைநிறுத்தி வைக்கப்படல் வேண்டும்” என்ற பிரேரணையை (விவாதமோ ஒத்திவைப்போ திருத்தமோ அனுமதிக்கப்பட மாட்டாது) உடனடியாகச் சபைக்கு விட வேண்டும்.

- (2) அத்தகைய ஏதேனும் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் மற்றும் எவரேனும் உறுப்பினர் இந் நிலையியற் கட்டளையின் கீழ் இடை நிறுத்தப்படும்போது முதலாவது சந்தர்ப்பத்தில் அத்தகைய உறுப்பினரின் இடைநிறுத்துகை இருவாராங்களுக்கானதாதல் வேண்டும். அதே கூட்டத் தொடரின்போது இரண்டாவது சந்தர்ப்பத்தில் மூன்று வாரங்களிற்கானதாதல் வேண்டும் என்பதுடன் அதே கூட்டத் தொடரின்போது மூன்றாவது அல்லது ஏதேனும் அடுத்துப் பின்னரான சந்தர்ப்பத்தில் நான்கு வாரங்களிற்கானதாகவிருத்தல் வேண்டும்.

- ஆயினும், எவ்வுறுப்பினரின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவோ அவ்வுறுப்பினருக்கு, அத்தகைய இடைநிறுத்துகைக் காலப்பகுதியின் போது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இறுதி வாக்கெடுப்பில் மட்டும் வாக்களிப்பதற்கு சபாநாயகரால் அனுமதியளிக்கப்படலாம்.

- (3) மேற்படி (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் செங்கோல் சபையில் வைத்திருக்கப்படும் போது அதனை தொடுகின்ற அல்லது அதனை உயர்த்துகின்ற எவரேனும் உறுப்பினர் பாரதூரமான ஒழுங்கீனத்தைப் புரிகின்றார் என்பதுடன், அத்தகைய தவறு அவ்வுறுப்பினரால் முதலாவது தடவையாகப் புரியப்பட்டதாகவிருந்தாலும் அவர் நான்கு வார காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

- (4) சமுகமாயிருக்கும் பல உறுப்பினர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து அக்கிராசனத்தின் அதிகாரத்தை புறக்கணித்தாலொழிய ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பெயர் குறிப்பிடப்படுதலாகாது.

- (5) இந்நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்றத்தின் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அல்லது கூட்டாக இயங்கும் பல உறுப்பினர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்ட கால வரையறையினுள் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சபாநாயகரின் கட்டளைக்கு எந்நேரத்திலாவது கீழ்ப்படிய மறுத்தால், தனது கட்டளையை செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சபாநாயகர் பணிக்கலாம்.

- *(6) இந் நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குற்றம் ஒன்று முழுப் பாராளுமன்றக் குழு நிலையில் புரியப்படும் போது தவிசாளர் உடனடியாக குழுவின் நடவடிக்கையை இடைநிறுத்தி அவ்வாறு இடைநிறுத்தி வைப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்திலேயே அத்தகைய குற்றம் இழைக்கப் பட்டதாகக் கொண்டு அவ்வறிவித்தலின் பேரில் பிரேரிக்கப்படும் ஒரு பிரேரணை திருத்தம், ஒத்திவைப்பு அல்லது விவாதம் எதுவுமின்றி சபாநாயகரால் சபைக்கு விடப்படுதல் வேண்டும்.*

- *78. ஒரு விவாதத்தின்போது தனது சொந்த வாதங்களை அல்லது ஏனைய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட வாதங்களை சலிப்பூட்டும் முறையில் மீட்டுரைப்பதிலோ அல்லது விவாதப் பொருளுக்குப் பொருத்தமற்ற முறையில் ஓர் உறுப்பினர் விடாப்பிடியாய் இருந்தால் சபாநாயகர் அவ்வுறுப்பினரின் நடத்தையை பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்த பின்னர் அவ்வுறுப்பினர் உரையாற்றுவதை நிறுத்துமாறு பணிப்பதுடன் நேரடி ஒலி, ஒளிபரப்பை நிறுத்துமாறும் கட்டளையிடலாம்.*

- *79. (1) பாரதூரமான ஒழுங்கற்ற முறையில் செயற்படும் உறுப்பினர் அன்றைய எஞ்சிய நேரக் கூட்ட அமர்விலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமென சபாநாயகர் கட்டளையிட வேண்டுமென்பதுடன் அவரது கட்டளையை செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சபாநாயகர் பணிக்கலாம். படைக்கலச்சேவிதர் அத்தகைய உத்தரவின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.*

- *(2) எச்சந்தர்ப்பத்திலாவது, சபாநாயகர் இந்நிலையியற் கட்டளையின் கீழ் தமக்குள்ள அதிகாரங்கள் போதியனவல்ல எனக்கருதினால் அவர், 77 ஆம் நிலையியற் கட்டளையை பின்பற்றி அத்தகைய உறுப்பினர்களை பெயர் குறிக்கலாம்.*

- *80. 77 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் இடை நிறுத்தப்பட்ட அல்லது 79 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் வெளியேறுமாறு பணிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து உடனடியாக வெளியேறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இடை நிறுத்துகைக் காலப்பகுதியின் போது குழுக்களிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும்.*

- *இக்கட்டளையின் நோக்கங்களுக்காக ‘பாராளுமன்ற வளவெல்லை’ என்பது, பாராளுமன்ற கட்டிடங்களையும் பாராளுமன்றத்தின் 1 ஆம் இலக்க வாயில் முதல் 3 ஆம் இலக்க வாயில் வரையான நிலப்பரப்பையும் உள்ளடக்கும்.*

பின்னிணைப்பு - உ

பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரித்தெடுத்த பாகங்கள் (அத்தியாயம் 383)

“பாகம் ஆ” - பாராளுமன்றத்தால் அல்லது உயர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறுகள்

29. இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் பாராளுமன்றத்தின் வரம்பில் எச்சரித்து நிறுத்திவைப்பதற்காக எவரேனும் ஆளின் வருகையைப் பெறும் நோக்கத்துக்காக அல்லது அப்பிரிவின் கீழ் அவரது அகற்றுகை கட்டளையிடப்பட்டிருக்கின்ற அல்லது அவரது நுழைவு தடைசெய்யப்பட்டிருக்கின்ற எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் வளவுகளிலிருந்து அகற்றும் நோக்கத்துக்காக, விடயத்திற்கேற்ப, வாயிற் பெருமகன் அல்லது படைக்கலச் சேவிதன் அல்லது பாராளுமன்றத்தின் வேறு எவரேனும் அலுவலர், தலைவரினால் அல்லது சபாநாயகரினால் அவ்வாறு செய்யுமாறு கட்டளையிடப்பட்டால், அத்தகைய ஆளை பாராளுமன்றத்தின் வளவுகளினுள் எந்த இடத்திலும் எழுத்தாணையின்றிக் கைதுசெய்தலும், மேற்சொல்லப்பட்ட நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நியாயமான வலோற்காரத்தைப் பயன்படுத்தலும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

தண்டனைகளை நிறைவேற்றுவதற்காகக் கைது செய்வதற்கான தத்துவம்.

“பாகம் ஆ”

ஒன்றில் பாராளுமன்றத்தால் அல்லது உயர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறுகள்

1. இச் சட்டத்தின் கீழான பாராளுமன்றத்தின் ஏதேனும் கட்டளைக்கு அல்லது தீர்மானத்துக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் முறையாக ஆக்கப்பட்டதான சனாதிபதியின் அல்லது சபாநாயகரின் அல்லது எவரேனும் உறுப்பினரின் ஏதேனும் கட்டளைக்கு கீழ்படிய வேண்டுமென்று தவறுதல் அல்லது மறுத்தல்.

2. அத்தகைய சமுகமளித்தல் அல்லது காண்பிப்பு சட்டத்தின் 13 ஆம் பிரிவிலும் 15 ஆம் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மன்னிப்பளிக்கப்பட்டாலொழிய, பாராளுமன்றத்தால் அல்லது அதன் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் குழுவால் சமுகமளிக்குமாறு அல்லது பத்திரங்களை, நூல்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு இடப்பட்ட கட்டளைக்கு வேண்டுமென்று கீழ்படியத் தவறுதல்.

3. அத்தகைய மறுப்பு 13 ஆம் பிரிவிலும் 15 ஆம் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மன்னிப்பளிக்கப்பட்டாலொழிய, பாராளுமன்றத்தின் முன்னர் அல்லது ஏதேனும் குழுவின் முன்னர் விசாரணை செய்யப்படுவதற்கு அல்லது சபையால் அல்லது ஏதேனும் குழுவால் கேட்கப்படும் ஏதேனும் சட்டபூர்வமான மற்றும் இயைபான கேள்விக்கு விடையளிக்க மறுத்தல்.

4. *பாராளுமன்றத்தில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்ற வளவுக்குள் எவரேனும் உறுப்பினரைத் தாக்குதல், நிந்தை செய்தல் அல்லது வேண்டுமென்று தடுத்தல்.*

5. *மன்ற அறையில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்ற வளவுக்குள் பாராளுமன்றத்தின் அலுவலரைத் தாக்குதல் அல்லது எதிர்த்தல் அல்லது வேண்டுமென்று தலையிடுதல்.*

6. *மன்ற அறையில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்றத்துக்குச் சமீபமாக பாராளுமன்றம் அல்லது ஏதேனும் குழு அமர்வில் இருக்கும்போது, அப்பாராளுமன்றத்தின் அல்லது குழுவின் நடவடிக்கைகள் குழப்பப்படுகின்றன அல்லது குழப்பப்படக்கூடும் என நம்புவதற்கு நியாயமான காரணங்களைத் தெரிந்துகொண்டு அல்லது அறிந்துகொண்டு ஏதேனும் குழப்பத்தை உண்டு பண்ணுதல் அல்லது அதில் சேர்த்துக்கொள்ளுதல்.*

7. *பாராளுமன்ற வளவுக்குள் மரியாதையீனமான நடத்தை.*

8. *பாராளுமன்றத்தின் முன்னர் அல்லது குழு முன்னர் சாட்சிக்காரர் ஒருவராக இருந்து மழுப்பிப் பேசுதல் அல்லது வேறு துர் நடத்தை.*

9. *குழுவின் நடவடிக்கைகள் எவற்றையும், அவை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடும் முன்னர் வெளியிடுதல்.*

10. *முற்போந்த பந்திகள் எதிலும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது தவிர்வுக்கு உடந்தையளித்தல்.*

பின்னிணைப்பு - ஊ

1973 ஆம் ஆண்டு நவெம்பர் 14 ஆந் திகதி புதன்கிழமை பி. ப. 4.00 மணிக்கு கௌரவ சபாநாயகரின் சபாகூடத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்ட அறிக்கையின் பொழிப்பு (பாராளுமன்ற உறுப்பினர்களது உடை தொடர்பானது)

2. பாராளுமன்ற உறுப்பினர்களது உடை பற்றிய ஒரு பிரச்சினை அண்மையில் எழுந்ததாக கட்சித் தலைவர்களுக்கு கௌரவ சபாநாயகர் தெரிவித்தார். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தாமதமாக சபை அமர்வுகளுக்கு சமுகமளிக்கின்ற போது பல்வேறு வகையான ‘டியூனிக் கோட்டுகளை’ அணிந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சபையின் நல்லொழுக்கம், கௌரவம் ஆகியவற்றை பேணுவதில் உறுப்பினர்களது உடை முக்கிய அங்கமாக திகழ்வதாகவும், ஆகவே உறுப்பினர்கள் பின்பற்றக்கூடிய உடை தொடர்பான சில தராதரங்களை முன்வைப்பது அவசியமாகு மென அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் சபையினுள் பின்வரும் மாதிரியான உடைகள் மாத்திரமே அனுமதிக் கப்படுமென கௌரவ சபாநாயகர் ஆலோசனை தெரிவித்தார்.

(1) தேசிய உடை

(2) நீண்ட ஆடை (lounge suit)

(3) நீண்ட கைகளையுடைய ‘டியூனிக் கோட்’, கழுத்து வரை பொத்தானிடப்பட்டிருக்க அதனுடன் நீண்ட காற்சட்டை அல்லது ஆடை (cloth)

ஏற்றுக்கொள்ளப்பட்ட சமய நம்பிக்கையுடன் தொடர்புடைய தலையணியைத் தவிர வேறு விதமான தலையணிகள் சபையினுள் அனுமதிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் மேற்படி பிரேரணைகளை கட்சித் தலைவர்கள் ஏற்றுக் கொண்டதுடன் அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் அவை அமுல்படுத்தப்பட வேண்டுமென தீர்மானித்தனர்.

இவ்விடயம் தொடர்பான தமது தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர்களின் அவதானத்திற்கு கௌரவ சபாநாயகர் வருங்காலத்தில் கொண்டு வர வேண்டு மெனவும் தலைவர்கள் இணங்கினர்.

தற்போதைய ஆடை நெறிமுறை

(1973, நவெம்பர் 14 இல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட தீர்மானம், அதனைத் தொடர்ந்து பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், இதுவரை பின்பற்றப்பட்ட மரபுகள் ஆகியவற்றின் பிரகாரம்)

(ஆ) ஆண் பாரளுமன்ற உறுப்பினர்களுக்கு - தேசிய உடை/முழு ஐரோப்பிய உடை/ கழுத்து வரை பொத்தானிடப்பட்ட நீண்ட கைகளையுடைய ‘டியூனிக்’, நீண்ட காற்சட்டை அல்லது சாரம்)

(ஆ) பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சாரி மற்றும் ஜாக்கெட்

(இ) சமய அனுஷ்டான மரபுகளுக்கு ஏற்ப ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆடை

(ஈ) சமய அனுஷ்டான மரபுகளின் பிரகாரம் தலையை மூடுதல்

இயலுமானவரை இளம் நிறங்களையுடைய ஆடைகளை அணியும் படியும், கடும் நிறத்திலான /மிகை நிறத்திலான அல்லது கோடிடப்பட்ட /கட்டமிடப்பட்ட ஆடைகளை சபையினுள் அணிவதை தவிர்க்கும் படியும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

பின்னிணைப்பு - எ

2018, செத்தெம்பர் 04 ஆந் திகதிய பாராளுமன்ற விவாதங்களின் (ஹன்சாட்) பொழிப்புரை- தொகுதி 263 - இல. 10 பக்கம் 7 பாராளுமன்ற படைக்கலச் சேவிதர் நியமனம் பற்றிய அறிவித்தல்

" නිවේදන
அறிவிப்புகள்
ANNOUNCEMENTS

II

පාර්ලිමේන්තුවේ වේත්‍රධාරි පත් කිරීම
(பாராளுமன்ற படைக்கலச் சேவிதர் நியமனம்)
APPOINTMENT OF SERJEANT-AT-ARMS OF PARLIAMENT

ගරු කථානායකතුමා
(மாண்புமிகு சபாநாயகர் அவர்கள்)
(The Hon. Speaker)

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ වේත්‍රධාරි තනතුර සඳහා නියෝජ්‍ය වේත්‍රධාරි නරේන්ද්‍ර ප්‍රනාන්දු මහතා 2018 අගෝස්තු මස 30 වැනි දින සිට බල පැවැත්වෙන පරිදි පත් කරනු ලැබ ඇති බව පාර්ලිමේන්තුවට දන්වනු කැමැත්තෙමි’’.

பின்னிணைப்பு - ஏ

2018, ஓகத்து 24 பாராளுமன்ற விவாதங்களின் (ஹன்சாட்) பொழிப்புரை- தொகுதி 262 - இல. 10 பக்கங்கள் 1698 மற்றும் 1699

1698

" කල් තැබීම
(ஒத்திவைப்பு)
ADJOURNMENT

ගරු ලක්ෂ්මන් කිරිඇල්ල මහතා
(மாண்புமிகு லக்ஷ்மன் கிரிஎல்ல)
(The Hon. Lakshman Kiriella)

ගරු කථානායකතුමනි, ''පාර්ලිමේන්තුව දැන් කල් තැබිය යුතුය'' යි මා යෝජනා කරනවා.

ප්‍රශ්නය සභාභිමුඛ කරන ලදී.
வினா எடுத்தியம்பப்பெற்றது.
Question proposed.

1699

අනිල් පරාක්‍රම සමරසේකර මහතා: සේවය ඇගැයීම
திரு. அனில் பராக்கிரம சமரசேகர : சேவை பாராட்டு
MR. ANIL PARAKRAMA SAMARASEKERA: APPRECIATION OF SERVICE

(අ.භා. 6.21)

ගරු ලක්ෂ්මන් කිරිඇල්ල මහතා
(மாண்புமிகு லக்ஷ்மன் கிரிஎல்ல)
(The Hon. Lakshman Kiriella)
ගරු කථානායකතුමනි, මම පහත සඳහන් යෝජනාව ඉදිරිපත් කරනවා:

"මෙම පාර්ලිමේන්තුවේ වේත්‍රධාරිවරයා වශයෙන් මෙම ගරු සභාව තුළ වසර 12ක පමණ කාලයක් සේවය කළ, පාර්ලිමේන්තුවේ සේවා කාලය වසර 22ක් සම්පූර්ණ කර විශ්‍රාම ගන්නා අනිල් පරාක්‍රම සමරසේකර මහතා ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවට කරන ලද විශිෂ්ට සේවාව මෙම ගරු සභාව අගය කරන අතර, ඔහු විශ්‍රාම යන අවස්ථාවේ මෙම පාර්ලිමේන්තුව ඔහුට ශුභාශිංසනය කරයි".

பின்னிணைப்பு - ஐ

மேல் சபையின் செங்கோல்

(செனட் சபை)

1972 வரையில் காணப்பட்ட மேல் சபையினால் (செனட்) பயன்படுத்தப்பட்ட செங்கோலானது 1956, நவெம்பர் 01 இல் அப்போதைய தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலக்க அவர்களினால் செனட் சபைக்கு வழங்கப்பட்டதாகும்.

இந்த செங்கோலை தயாரிப்பதற்கான பொறுப்பு 'ஹேமசந்திர சகோதரர்கள்' என அழைக்கப்படும் கொழும்பிலுள்ள நகை தயாரிப்பு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டது. இந்த செங்கோலை நுண் கலை கல்லூரியைச் சேர்ந்த கலைஞர் டபிள்யூ. ஏ. ஆரியசேன வடிவமைத்ததாக கூறப்படுகிறது. குறிப்பிடப்பட்ட கம்பனியின் அறிவுறுத்தலின் பிரகாரம், ரம்புக்கன்ன, தொம்பேமடையைச் சேர்ந்த கைவினைஞர் ஈ. என். பியதிலக்க இதனை தயாரித்தார்.

இந்த செங்கோல் 52 அங்குலம் நீளமுடையதாகும். இதன் நிறை 7.5 இறாத்தல். இது 355 பகுதிகளைக் கொண்டது. இதனை நாற்பது பாகங்களாக பிரித்தெடுக்க முடியும். தலை சிறந்த இந்த படைப்பினை உருவாக்குவதற்கு ஏனைய பொருட்களுக்கு மேலதிகமாக இரண்டு யானை தந்தப் பகுதிகள், 20 கரட் உடைய தங்கப் பவுன்கள், 3.5 இறாத்தல் நிறையுடைய 45 வெள்ளித் துண்டுகள், பல மாணிக்கக் கற்கள் ஆகியன பயன்படுத்தப் பட்டுள்ளன.

இந்த செங்கோலின் மேல் பாகத்தில் "சான்தின்டிரையோச்சா நிபாகோச்சா" என்ற பாளி வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

1949 முதல் 'ஜென்ட்ல் மேன் அஸர்' Gentleman Usher பதவியை வகித்த அலுவலர்கள்

* திரு. வி. டி. டிக்மன் - 1949, யூலை முதல் 1958, யூன் வரை

* மேஜர். டபிள்யூ. பி. ஜே. சில்வா, MBE, CLI - 1958, யூன் முதல் 1959, யூன் வரை

* Lt. cdr. என். பி. எஸ். விஜேவிக்ரம - 1959, யூன் முதல் 1964, யூலை வரை

(1964, யூலை முதல் 1972 வரை செனட் கட்டிட அத்தியட்சகர் மற்றும் ஜென்ட்ல் மேன் அஸர் பதவியினை Lt. cdr. என். பி. எஸ். விஜேவிக்ரம வகித்தார்.)